Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

THURSDAY, MAY 27, 2021

வியாழக்கிழமை மே 27, 2021 | ஒளி: 06 கதிர்: 06 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# ‘கொரோனா தடுப்பூசி மூன்று வேண்டும்’



கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டவர்களுக்கு, ஒரு வருடங்களுக்கு மாத்திரம் பாதுகாப்புக் கிடைக்குமென தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான திஸ்ஸ விதாரண,

தொடர்ச்சி P2



கழிவுகளை அள்ளுவதற்காக

# கரைகளில் மொய்த்தனர்

**பற்றி எரிவதால் பக்கத்தில் செல்லமுடியவில்லை**

**காயமடைந்த இருவருக்கும் கொரோனா உறுதி**

**கரைக்குச் செல்லாதீர்கள் என இந்தியப் பிரஜைகளுக்கு அறிவுரை**

நீர்கொழும்பு உள்ளிட்ட கரையோரங்களில் ஒதுங்கும், பொருள்களை மக்கள் அலையலையாய் திரண்டு அள்ளிச் செல்லும் காட்சிகள் அடங்கிய காணொளிகள், சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன. மக்களின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு கடுமையான கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2

# ‘மொய்த்தவர்களை தேடி வேட்டை’



தீப்பற்றி எரிந்து இரண்டாகப் பிளந்த கப்பலில் இருந்து கடலுக்குள் விழுந்து கரையொதுங்கும் கழிவுப்பொருள்களை அள்ளிச்சென்றவர்கள் மற்றும் பொருள்களை அள்ளிச்செல்வதற்காக மொய்த்தவர்களைத் தேடி, கைது செய்வதற்கான செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

“பமுனுகம, துங்கால்பிட்டிய, கொச்சிக்கடை, நீர்கொழும்பு ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட கடற்கரையோரங்களிலேயே இவ்வாறான கழிவுப்பொருள்கள் கரையொதுங்குகின்றன” என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண, தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பூசக்காய் கிருமி நாசினி

குன்னூர்:

கொரோனா தொற்று பரவலை அடுத்து மக்கள் அடிக்கடி கிருமி நாசினி மற்றும் சவர்க்காரங்களை கொண்டு கைகளை சுத்தம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு பழங்குடியின கிராம மக்கள் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள கைகளை கழுவுவதற்கு பூசக்காய் என்ற பொருளை பயன்படுத்தி வருகின்றனர்.

புதுக்காடு கிராமத்தில் பழங்குடியின மக்கள் வசித்து வருகிறனர். வனப்பகுதியில் கிடைக்கும் அரிய வகை பொருள்களை பயன்படுத்தி வருகின்றனர்.

அந்த மக்கள் வனப்பகுதியில் உள்ள அரிய வகை மரத்தில் கிடைக்கும் பூசக்காய்களை சேகரித்து, அவற்றை வெயிலில் உலர்த்தி பயன்படுத்தி வருகின்றனர்.

தொடர்ச்சி P2

## நீங்கள் கடன் பெற்றவரா? சந்தோஷமான செய்தி

ச.சேகர்

கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மீதான நிவாரணத்தை ஒகஸ்ட் மாதம் இறுதி வரை நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 3 கொரோனாக்கள் தப்பியோட்டம்



சுப்பிரமணியம் பாஸ்கரன்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மூவர் தப்பியோடிவிட்டனர், பூஸா சிறைச்சாலையின் கைதியொருவரும், கொள்ளுப்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவரும், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கைதியொருவருமே இவ்வாறு தப்பியோடியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ‘காதுகளில் பூக்களை சுத்துகிறது அரசாங்கம்’

கொரோனா தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டம் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு அரசாங்கம் சமர்ப்பித்த அறிக்கைக்கு முரணான வகையில், தற்போது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த ஜே.வி.பியின் தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க, இந்த விடயத்தில் அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனத்தையும் ஏமாற்றியுள்ளது என்றார்.



தொடர்ச்சி P2

## உதவிய எம்.பிக்கு 14 நாள் தனிமை

நூருல் ஹுதா உமர்



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் நேற்று (26) முதல் 14 நாள்களுக்கு சுயதனிமைபடுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது வீட்டுக்கு அருகிலுள்ள ஒருவர், திடீர் சுகயீனமுற்றுள்ளார். அவரை தனது வாகனத்தின் மூலம், பைசால் காசிம் எம்.பி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தார்.

தொடர்ச்சி P2

## பாராளுமன்றில் 10 பேருக்கு கொரோனா

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தின் செயலாளர் உள்ளிட்ட பணியாளர்கள் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்தார்.

“அந்தப் பணியாளர்கள் அனைவரும் சுய



தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காட்போட் சவப்பெட்டி தயார்



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை வைப்பதற்காக தெஹிவளை - கல்கிஸை நகர சபையால் ‘காட்போட் சவப்பெட்டிகள்’ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

“அப்புறப்படுத்தப்பட்ட காகிதம் மற்றும் காட்போட் அட்டைகளை மீள்சுழற்சி செய்வதன் ஊடாக, அவ்வாறான சவப்பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன” என நகர சபை உறுப்பினர் பிரியந்த சஹபந்து கூறியுள்ளார்.

இதன் ஊடாக, சவப்பெட்டிகளை தயாரிப்பதற்கான பலகைகளை எடுப்பதற்காக, வெட்டப்படும் மரங்களைக் காப்பாற்றுவதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் என்றார்.

தொடர்ச்சி P2

## பயங்கர பேயாக மாறி கரையை கடந்தது ‘யாஸ்’

### ‘போக வேண்டாம்: போகவே வேண்டாம்’

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த ‘யாஸ்’ புயல் பயங்கர பேயாக மாறி, ஒடிசா அருகே கரையை கடந்துசென்றுள்ளது. இதனால், மேற்கு வங்கம், ஒடிசாவில் பேய்காற்று வீசியதுடன் கனமழையும் கொட்டித் தீர்த்தது.

இதனால் மேற்கு வங்கம், ஒடிஸா பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2





## 48ஆவது சட்டமா அதிபராக சஞ்சய் ராஜரட்ணம் நியமனம்

ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரட்ணம், ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் புதிய சட்டமா அதிபராக நேற்று (26) பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

நாட்டின் 48ஆவது சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் சஞ்சய் ராஜரட்ணம், சட்டமா அதிபர் திணைக்களத்தில் 34 வருடங்கள் சேவையாற்றி உள்ளதோடு, அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும், பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவிவகித்தார். கொழும்பு றோயல், பம்பலப்பிட்டி சென்பீட்டர்ஸ் கல்லூரிகளின் பழைய மாணவரான இவர், 2014ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

உள்வரும் பயணிகளுக்கு:

## ஜூன் 1 முதல் தடை நீக்கம்



தற்போது மூடப்பட்டுள்ள இலங்கை சர்வதேச விமான நிலையங்கள் எதிர்வரும் ஜுன் மாதம் 1 முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபாலி தர்மதாச அறிவித்துள்ளார்.

உள்வரும் பயணிகளுக்காக அவ்வாறு திறக்கப்பட்டாலும் கடந்த 14 தினங்களுக்குள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த பயணிகளை அனுமதிப்பது தொடர்பான கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயணிகளின் வருகைக்கான தற்காலிக தடை நீக்கப்பட்ட பின்னர், குறைந்தது 2,500 ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான திட்டங்கள் உள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர், உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளிடமிருந்து இதற்கான அனுமதியைப் பெற்ற பின்னரே, ரஷ்யா சுற்றுலாப் பயணிகளை அழைத்து வர உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘கல்வி அமைச்சுக்கு காது கேட்பதில்லை’

“மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேற்படுத்துவது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்தாலும், கல்வியமைச்சு அவற்றைக் கவனத்தில் கொள்வதாக இல்லை எனத் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இணையவழிக் கற்பித்தலை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்க வேண்டுமென வலியுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

ලංකා ගුරුසේවා සංගමය
இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்
Ceylon Teachers Service Union

PAGE 1 தொடர்ச்சிகள்

# கரைகளில் மொய்த்தனர்

பாதுகாப்புத் தரப்பினர் எவ்வளவு அறிவுரைகளைக் கூறியும், கரையோரங்களில் ஒதுங்கும் பொருள்களை, கேட்பாரின்றி அள்ளிச்செல்வோர், “சுய புத்தி இல்லாத ஜனங்கள்” என குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன.

பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் நிலையில், அந்தக் கரையோரங்களை பார்க்கும் போது, மக்கள் எதனை அள்ளிச்செல்வதற்காக மொய்க்கின்றனர் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

கொழும்புத் துறைமுகத்துக்கு வடமேல் திசையில் நங்கூரமிடப்பட்டுள்ள எக்ஸ் - பிரஸ் பேர்ல் சரக்குக் கப்பல் தீ விபத்துக்குள்ளானது. அக்கப்பல் பற்றியெறிவதால், அருகில் கூட செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கப்பலிலிருந்து கடலுக்குள் விழும் பொருள்கள், கொள்கலன்கள், சிதைவுகள் நீர்கொழும்பு மற்றும் அதனை அண்மித்த கரையோரங்களில் ஒதுங்கிவருகின்றன.

கரையொதுங்கும் கழிவுகளில், அபாயகரமான பொருள்கள் காணப்படலாமென கடல்சார் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி தர்ஷனி லஹந்தபுர எச்சரிக்கை விடுத்துள்ளதோடு, இப்பொருளகளுக்கு அருகில் செல்வதையும், அவற்றைத் தொடுவதையும் தவிர்க்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இக்கப்பலில் காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊழியர்களில் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்டிருந்த இவர்கள் பின்னர் தனியார் வைத்தியசாலையொன்றுக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையில் அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

“தீயணைப்பு மற்றும் கடற் பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய இரண்டு இந்தியக் கப்பல்கள் தீயணைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு வந்துள்ளன” என கடற்படையின் பேச்சாளர் கெப்டன் இந்திய டி சில்வா தெரிவித்துள்ளார்.

“இதேவேளை, தீப்பற்றி எரியும் இந்த இராசாயனக் கப்பலின் அருகில் செல்ல முடியவில்லை” எனவும் தெரிவித்துள்ளார்.

இக்கப்பலில் இருந்த பல கண்டெய்னர்கள் கடலில் வீழ்ந்துள்ளன. அவற்றின் எண்ணிக்கையை சரியாகக் கூறமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, இலங்கையின் கரையோர பிரதேசங்களுக்கு செல்லவேண்டாமென தங்களுடைய நாட்டுப் பிரஜைகளுக்கு இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

# ‘மொய்த்தவர்களை தேடி வேட்டை’

“பயணக்கட்டுப்பாடு அமுலிலுள்ள நிலையில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமை ஒருபுறம் குற்றமாகும். இரசாயன பதார்த்தங்கள் அடங்கிய மனித உடலுக்கு எவ்வகையில் தீங்கை ஏற்படுத்தும் என்பதை அறியாமல், அதனை கொண்டு செல்வதும் அடுத்த குற்றமாகும்” என்றார்.

“இவ்வாறு, பொருள்களைக் காவிச் சென்றவர்களுக்கு எதிராக நீர்கொழும்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது” என்றார்..

விசேடமாக பமுனுகம, துங்கால்பிபட்டிய, நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால் விசேட குழுக்கள் அமைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த அவர், இது தொடர்பான கா ணொளிகள் கிடைத்துள்ளதாகவும், அதனை அடிப்படையாக வைத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## நீங்கள் கடன் பெற்றவரா? சந்தோஷமான செய்தி

சகல அங்கிகாரம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகளுக்கு இது தொடர்பான அறிவித்தலை இலங்கை மத்திய வங்கி திங்கட்கிழமை (25) வெளியிட்டிருந்தது. மே 15 வரை செயலிலுள்ள, செயலில் இல்லாத சகல கடன் வசதிகளுக்கும் ஆகஸ்ட் 31 வரை மீளச் செலுத்தும் நிவாரண காலம்.

இவ்வாறான நிவாரண காலப்பகுதிக்கு அறவிடப்படும் வருட வட்டி 6.18%.

இந்தச் சலுகையினூடாக ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை நிலுவைக் காலம் நீடிக்கப்படும் வசதிகளில் தொழிற்படு மூலதனம், அடகு, தற்காலிக மேலதிகப் பற்றுகள், குறுங்கால நிதி வசதிகள் போன்றனவும் அடக்கம்.

மே 15 முதல் ஆகஸ்ட் 31 வரையான நிவாரண காலப்பகுதிக்கு தண்ட வட்டி அறவீடு மேற்கொள்ளப்படக்கூடாது.

இந்த நிவாரண வசதியை வழங்குவதற்காக வங்கிகளால் மேலதிக கட்டணங்களை அறவிட முடியாது.

ரூ. 500,000க்கு குறைந்த பெறுமதியான காசோலைகளின் செல்லுபடியாகும் காலம் ஜுன் 30 ஆம் திகதி வரை நீடிப்பு.

காசோலை மீளத் திரும்பல்கள் மற்றும் காசோலை கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சகல அறவீடுகளையும் ஜுன் 30 ஆம் திகதி வரை நிறுத்துமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தல்.

கடன் அட்டைகள் மற்றும் இதர கடன் வசதிகள் மீதான காலம் தாழ்த்திய கொடுப்பனவுக் கட்டணத்தை ஜுன் 30 ஆம் திகதி வரை அறவிடுவதை நிறுத்துவதுடன், முற்கூட்டியே செலுத்தித் தீர்ப்பதற்கான கட்டண அறவீட்டை தவிர்க்குமாறும் அறிவுறுத்தல்.

ஜுன் மாதம் 21ஆம் திகதி வரை புதிய நிவாரணத்துக்கு தகைமை வாய்ந்த வாடிக்கையாளர்கள் கோரலாம்.

ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் மீளச் செலுத்தல் சலுகைகளை தற்போது அனுபவிக்கும் வாடிக்கையாளர்கள் இந்த புதிய நிவாரணச் சலுகைக்கு தகைமை பெறமாட்டார்கள்.

தொடர்ந்தும் தமது கடன் பெறுகைகளுக்கான மீளச் செலுத்தல்களை மேற்கொள்ளக்கூடியவர்கள், தொடர்ந்து மீளச் செலுத்துமாறும் அறிவுறுத்தல்.

## ‘கொரோனா தடுப்பூசி மூன்று வேண்டும்’

இரண்டாவது தடவையாக டோஸை பெற்றுக்கொண்டவர்கள் ஒருவருடத்துக்குள்ளேயே மூன்றாவது டோஸையும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு குறைந்து செல்வதாகவும், இதனால் மூன்றாவது டோஸ் ஏற்றிக்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

“உடலில் வைரஸ், நுழைவதன் மூலம் இந்த நோய் பரவுவதில்லை எனவும் தெரிவித்த அவர், நோய் பரவ வேண்டுமென்றால் கணிசமான எண்ணிக்கையிலான வைரஸ்கள் உடலில் நுழைய வேண்டும்”

**“ தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு குறைந்து செல்வதாகவும், இதனால் மூன்றாவது டோஸ் ஏற்றிக்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்**

என்றார். முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளிகளைப் பேணி, அடிக்கடிக் கைகளைக் கழுவுவதனூடாக வைரஸ் உடலுக்குள் நுழைவதைத் தடுக்க முடியும். இச்செயற்பாடுகளினூடாக வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவதையும் தடுக்க முடியும் என்றார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நூற்றுக்கு 80 சதவீதமானவர்களுக்கு நோய் அறிகுறிகள் இல்லை. எனினும், இந்த நோய் கடுமையான ஒன்றெனவும் தெரிவித்துள்ளார்.

## 3 கொரோனாக்கள் தப்பியோட்டம்

கொள்ளுப்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் “அம்பாறையைச் சேர்ந்த மொஹமட் ரிகாஷ் எனும் பெயரைக் கொண்டவரே, 25ஆம் திகதி மாலை தப்பியோடிவிட்டார்” என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அவர் தொடர்பிலான தகவல்கள் கிடைத்தால் உடனடியாக அறிவிக்குமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, பூஸா சிறைச்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த கைதிகளில் ஒருவர், பூஸா சிறைச்சாலையிலிருந்து இடைக்கால சிகிச்சை நிலையத்துக்கு பஸ்ஸொன்றில் மாற்றப்படும்போது தப்பியோடியுள்ளார்.

**“ தனக்கு கடும் நெஞ்சுவலியென அவர் கூறியுள்ளார். அதனையடுத்து, கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கிருந்தே அவர் தப்பியோடியுள்ளார்**

அத்துடன், இயக்கச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் தங்கியிருந்த வெளி மாவட்டத்தைச் சேர்ந்த சிறைக்கைதி, கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று (26) காலை, தப்பியோடியுள்ளார்.

தனக்கு கடும் நெஞ்சுவலியென அவர் கூறியுள்ளார். அதனையடுத்து, கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கிருந்தே அவர் தப்பியோடியுள்ளார்.

## ‘காதுகளில் பூக்களை சுத்துகிறது அரசாங்கம்’

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதாரத் தரப்பினருக்கும், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கும், நெடுநாள் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், கொரோனா தொற்றொழிப்புச் செயற்றிட்ட முகாமைத்துவ தரப்பினருக்கும் தடுப்பூசி வழங்குவதாக உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. ஆனால், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட திட்டத்துக்கு முரணாகவே தடுப்பூசிகள் தற்போது வழங்கப்படுகின்றன என்றார்.

தடுப்பூசி வழங்கல் தற்போது அரசியல் வியாபாரமாகியுள்ளது. அரசியல்வாதிகள் தங்களின் தரப்பினருக்காக கொவிட் தடுப்பூசிகளை ஒதுக்கிக் கொள்கிறார்கள். ஆனால், நடுத்தர மக்கள் குறித்து அக்கறை கொள்ளவில்லை. இவ்வாறான செயற்பாடு அருவருக்கத்தக்கதாகும். கொவிட் விடயத்தில் அரசியல் செய்வதையும், சுய நலத்துடன் செயற்படுவதையும் அரசாங்கமும் அரசியல்வாதிகளும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவர்களின் குறுகிய நோக்கத்திலான செயற்பாடுகள் நாட்டுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார்.

கொவிட் -19 விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடாமல் இருப்பது சிறந்தது. ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற கொள்கையைச் செயற்படுத்துவதாக குறிப்பிட்டு ஆட்சிக்கு வந்த அவரால் கொவிட் -19 தடுப்பூசி செலுத்தும் விவகாரத்தில் கூட தனித்த கொள்கையை வகுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும் என்றார்.

## பூசக்காய் கிருமி நாசினி

சவர்காரங்களுக்குப் பதிலாக பூசக்காய்களை பயன்படுத்தி வருகிறார்கள்.

மேலும், இந்த பூசக்காய்களை தாங்கள் மட்டும் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சமவெளி பகுதிகளில் உள்ள தனியார் சவர்க்கார நிறுவனங்களுக்கும் அனுப்பி வருகின்றனர். தற்போது பள்ளி மாணவர்களுக்கு விடுமுறை காலம் என்பதால் பழங்குடியின மாணவர்கள் தங்கள் பொழுதை பயனுள்ள வகையில் கழிக்கும் வகையில் வனப்பொருட்களை சேகரித்து வருகின்றனர்.

இதுகுறித்து வட்டார மருத்துவ அலுவலர் கூறுகையில், வனங்களில் கிடைக்கும் சோப்புக்காய் என அழைக்கப்படும் பூசக்காயை நசுக்கினால் அதில் உள்ள வேதிப்பொருள் நுரைபோல் வெளிவரும். அது கிருமிகளை அழிக்கக்கூடியது. சவர்க்கார நிறுவனங்களே இந்த காயை தங்கள் தயாரிப்புகளில் பயன்படுத்தி வருகின்றனர் என்றார்.

## ‘கல்வி அமைச்சுக்கு காது கேட்பதில்லை’

கொவிட் -19 அசாதாரண நிலைமை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் வீடுகளுக்குள் முடங்கியிருக்கும் மாணவர்களுக்கான இணையவழிக் கற்பித்தலை விரிவுபடுத்த வேண்டுமெனவும் அச்சங்கம் வலியுத்தியுள்ளது.

இது தொடர்பில் அச்சங்கத்தின் உப- தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளதாவது, “கடந்த வருடம் முதல் வீழ்ச்சி கண்டுள்ள மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு இணையவழிக் கற்றல் செயற்பாடுகளுக்கான வசதிகளை விரிவுபடுத்த வேண்டும்.அதற்கான நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கென ஒதுக்கப்படும் நிதிகள் சரியான முறையில் செலவிடப்படாமை கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், கல்வியமைச்சால் ஆசிரியர்களுக்கென வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## காட்போட் சவப்பெட்டி தயார்

அவ்வாறு தயாரிக்கப்படும் காட்போட் சவப்பெட்டியொன்றை பத்தாயிரம் ரூபாய்க்கு விற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## உதவிய எம்.பிக்கு 14 நாள் தனிமை

சுகயீனமான நபருக்கு கொரோனா தொற்று உறுதியானது. அதனையடுத்து, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் பாராளுமன்ற உறுப்பினரும் சுயதனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

“இந்த இக்கட்டான சூழ்நிலையின் தாற்பரியங்களை அறிந்து, மக்கள் பொறுப்புடன் செயற்படுவது சாலச் சிறந்தது ” என பைசால் காசிம் எம்.பி பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பாராளுமன்றில் 10 பேருக்கு கொரோனா

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அவருடைய மனைவி ஜலனி பிரேமதாஸவும் கொரோனா தொற்றுக்குள்ளாகி, கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் குணமடைந்து வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தார்.

இந்நிலையில், கொழும்பு மார்க்கஸ் பெர்ணான்டோ மாவத்தையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம், பாராளுமன்ற கட்டடத்தொகுதியிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயம் ஆகிய இரண்டும் சுகாதாரத் தரப்பினரால் மூடப்பட்டுள்ளன.

## பயங்கர பேயாக மாறி கரையை கடந்தது யாஸ்

இதேவேளை, மீனவர்கள், கடற்படையினர் இலங்கை தீவைச் சுற்றியிருக்கும் கடல்களுக்கு செல்லவேண்டாமென்றும், குறிப்பாக வங்காள விரிகுடாவில் கடலுக்குச் செல்லக்கூடாதென்றும் வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் மோசமான வானிலை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

## ஜூன் 1 முதல்...

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமான நிறுவனம் மற்றும் இலங்கை ஏர்லைன்ஸ் ஆகியவற்றுடன் ரஷ்யாவின் தலைநகரம் மொஸ்கோவுக்கும் கொழும்புக்கும் இடையே, வாரத்துக்கு குறைந்தது ஒரு விமான சேவையை முன்னெடுக்கவும் வாரத்துக்கு குறைந்தது 275 பயணிகளை அழைத்து வருவது குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 76 ஆயிரம் வீடுகளை இருட்டாக்கிய காற்று

நாட்டில் நிலவும் மழை மற்றும் கடும் காற்றுடனான வானிலை காரணமாக சுமார் 76 ஆயிரம் வீடுகளில் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சீராக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷனா ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

**“ பல்வேறு பிரதேசங்களில் கடும் காற்று வீசி வருவதால் தொடர்ந்தும் மின் துண்டிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது**

தம்புள்ளை, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, ஹொரணை, இங்கிரிய, பலாங்கொடை, குளியாப்பிட்டிய பகுதிகளில் இவ்வாறு மின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு பிரதேசங்களில் கடும் காற்று வீசி வருவதால் தொடர்ந்தும் மின் துண்டிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்துண்டிப்பு ஏற்பட்ட பகுதிகளில் மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கு விசேட குழுவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.







## ஆபத்தை அள்ளிச் செல்லும் மக்கள்...

கொழும்புத் துறைமுகத்துக்கு வடமேல் திசையில் நங்கூரமிடப்பட்டுள்ள எக்ஸ் – பிரஸ் பேர்ள் இரசாயனப் பொருள்களைக் கொண்ட சரக்குக் கப்பல், தீ விபத்துக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், அக்கப்பலில் இருந்து கரை ஒதுங்கும் இரசாயன சிதைவுகள் உள்ளிட்ட அக்கப்பலின் பொருள்களை மக்கள் அள்ளிச் செல்வதைப் படங்களில் காணலாம்.



## கொரோனா செய்தித் துளிகள்

- வீடுகளிலேயே உயிரிழந்த நிலையில், வதுபிடிவல ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
- பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தைச் சேர்ந்த 10 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அவரது மனைவி ஆகியோர் குணமடைந்து வருவதாக எதிர்க்கட்சி அலுவலகம் அறிவித்துள்ளது.
- தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய மேலும் 686 பேர் நேற்று முன்தினம் (26) கைது செய்யப்பட்டுள்ளனர்.
- அமுலில் உள்ள பயணக்கட்டுப்பாடுகள் நேற்று முன்தினம் (25) தளர்த்தப்பட்டிருந்த நிலையில், நாடு முழுவதிலும் பதிவாகியிருந்த வீதி விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.
- மேலும் 2 மில்லியன் சினோஃபார்ம் தடுப்பூசிகளை அடுத்த மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட உள்ளன.
- எம்பிலிபிடிய விசேட பொருளாதார மத்திய நிலையம் இன்றும் (27), நாளையும் (31) தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# ‘தடுப்பூசி தருகிறோம்’

## ‘பணிப்புறக்கணிப்பைக் கைவிடுங்கள்’

நாடளாவிய ரீதியில், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் கிராம சேவகர்களுக்கும் அடுத்த கட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தப்படுமென உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் என்.எச். எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இதன்படி தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தடுப்பூசிகள் முதலில் மாவட்ட, பிரதேச செயலகங்களின் ஊழியர்கள், கிராம சேவகர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ள அவர், கிராம சேவகர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்படுமென்பதால் பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டுவிட்டு, மக்கள் சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் தெரிவித்துள்ளார்.

தங்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டுமென கிராம சேகவர்கள் நேற்று முன்தினம் (25) முதல் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களின் உறவினர்களுக்கு மாத்திரம் தடுப்பூசி வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## 5 இலட்சம் தடுப்பூசிகள் வந்தன

### ஒரு மாதத்துக்குள் 2 மில்லியன் தடுப்பூசிகளை வழங்கவும் திட்டம்

சீன அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள 5 இலட்சம் இரண்டாவது தொகுதி ‘சினோஃபார்ம்’ தடுப்பூசிகள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை, நேற்று (26) வந்தடைந்தன.

**“ ‘சைனோவெக்’ தடுப்பூசிகளை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளது**

5 இலட்சம் தடுப்பூசிகளுடன் இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல்.869 விமானம், நேற்று (26) அதிகாலை 12.05க்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்தத் தடுப்பூசிகள், இலங்கைக்கான சீன தூதுவர் ஷீ சென் ஹொனினால், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இந்நிலையில், தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்கு இவற்றைப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை வழங்கியுள்ளார்.

அந்த வகையில் சுகாதார துறைகளின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளித்து, நாட்டின் சில மாவட்டங்களுக்கு தடுப்பூசிகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சீன அரசாங்கத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பெறுபேறாக, இந்த இரண்டாவது தடுப்பூசிகள் தொகுதி இலங்கைக்கு அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றுள்ளது.

அரசாங்கம் கொள்வனவு செய்வதற்காக கோரியுள்ள மேலும் 2 மில்லியன் தடுப்பூசிகள் இன்னுமொரு மாதத்திற்குள் வழங்கவும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை அன்பளிப்புச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இலங்கைக்கும், சீனாவுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பயனாக ‘சைனோவெக்’ (Sinovac) தடுப்பூசிகளை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

தடுப்பூசிகளை பொறுப்பேற்கும் நிகழ்வில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சன்ன ஜயசுமன, டீ.வீ. சானக்க, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, சுகாதார அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க, அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 260 கைதிகள் விடுதலை

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ள 260 சிறைக்கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்துள்ளார். இதில் 29 கைதிகள் ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 53 கைதிகளும் இதன்போது விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர், ஒருபோதும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை எனவும் கூறியுள்ளார்.

## வெசாக் பௌர்ணமி தின நிகழ்வில் பிரதமர்





அனைத்து பௌர்ணமி தினங்களிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கமைய நடத்தப்பட்டு வரும் ‘அமாதம் சிசிலச’ தர்ம உபதேசத் தொடரின் 210ஆவது நிகழ்வு, வெசாக் பௌர்ணமி தினமான நேற்று (26) அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போது பிரதமர், அவரின் பாரியார் வழிபாடுகளில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்.

## வீடு திரும்பினார் முஜிபூர்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

இம்மாதம் 20ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முஜிபூர் எம்.பி, நேற்று முன்தினம் (25) வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பினார்.

இதேவேளை வீடு திரும்பியுள்ள தான் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய தொடர்ந்து 5 நாள்கள் தனிமைப்ப டுத்தப்பட்டு உள்ளதாகவும் தனக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தாலும், தனது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை எனவும் தெரிவித்தார்.

## ‘ரிஷாட் எம்.பிக்கும் கொரோனா ஏற்படலாம்’

### அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அச்சம்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்ற விசாரணைப் பிரிவில், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவும் அபாயம் உள்ளதாகவும் இதனால், இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள ரிஷாட் பதியுதீன் எம்.பியின் சுகாதார பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சட்ட ஆலோசகர் ருஸ்தி ஹபீப் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி நள்ளிரவு குற்றவிசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (26) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.



தொடர்ந்துரைத்த அவர்,

“ரிஷாட்டின் கைதானது நீதிமன்ற நடவடிக்கைகக்கு அப்பால், பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டதொன்று. அவர் அரசியல் கைதியாக பார்க்கப்படுவதாகவே நாம் கருதுகின்றோம். அவர் பதிவு செய்யப்பட்ட ஜனநாயகக் கட்சியொன்றின் தலைவர். 20 வருடங்கள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும், அதிக மக்கள் செல்வாக்கு உள்ள ஒருவர்; ஆனால், சட்டமா அதிபரின் கட்டளைக்கு அமைய ரிஷாட் கைதுசெய்யப்படவில்லை என எமக்குத் தெரியவருகின்றது” என்றார்.

அவர் மீது வெறுக்கத்தக்க பேச்சுகளை, கருத்துகளை முன்வைத்து மக்களிடம் அவருக்கு எதிரான கருத்துகளை முன்வைத்து இனம் மற்றும் அரசியல் ரீதியாக அவரை வீழ்த்த முடியாத சிலர், அவரது அரசியல் பயணத்தைக் குழப்புவதற்கும் மக்களிடமிருந்து அவரை தூரமாக்குவதற்கும் மற்றும் இந்த நாட்டில் அவருக்கு எதிராக தவறான எண்ணத்தைத் தோற்றுவித்து இவ்வாறான பொய்யான கதைகளை கூறியே அவரைக் கைதுசெய்துள்ளனர் என்றார்.

## ‘மூன்று அலைகளிலும் மூன்று நிகழ்ச்சி நிரல்கள்’



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலின் மூன்று அலைகளிலும் அரசாங்கமானது மூன்று விடயங்களை நிறைவேற்றி கொண்டு உள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னபெரும சாடியுள்ளார்.

“முதலாவது அலையில் தேர்தல் நடத்தப்பட்டது. இரண்டாது அலையின்போது 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மூன்றாவது அலையில் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டம் நிறைவேற்றப்பட்டது. கொரோனா வைரஸிலிருந்து நாட்டு மக்களை மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் நிகழ்ச்சி நிரல் இதுதானா? என்று கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் தொடர்பில் நிபுணர்களின் கருத்துகளை அரசாங்கம் கேட்பதில்லை. தடுப்பூசிகள் இலவசமாகக் கிடைக்கும் வரையில், அரசாங்கம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறது என்றும் சாடினார்.

நாட்டு மக்களுக்காக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொடர்பில் வைத்தியர்கள் பேசுவதற்கும் அரசாங்கம் தடைவிதித்துள்ளது. கொரோனா தடுப்பூசி விடயத்தில் அரசியல் தலையீடுகள் உள்ளன. கொரோனாவை விட தடுப்பூசியால் பாரிய நெருக்கடி ஒன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது.

முதல் டோஸைப் பெற்றுக்கொண்ட பொலிஸாருக்கு இரண்டாவது தடுப்பூசி இல்லை. இதுவரையில் வெறும் 5 இலட்சம் தடுப்பூசிகளையே அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது. நாட்டு மக்கள் கொரோனாவால் உயிரிழந்து வருகின்ற நிலையில், தடுப்பூசிகள் இலவசமாகக் கிடைக்கும் வரையில் அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது என்றார்.

## ‘சபாநாயகர் அருவருக்கத்தக்க அரசியல்வாதி’



நாட்டின் தற்போதைய சபாநாயகர், அருவருக்கத்தக்க அரசியல்வாதி என்று விமர்சித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, கொரோனா வைரஸை தனது அரசியலுக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஒருபோதும் பயன்படுத்தியதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள் அவர், “கொரோனா வைரஸுக்கு மத்தியில் மக்களிடத்தில் சென்று சேவை செய்ததாலேயே, தற்போது சஜித்துக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு தற்போதைய நெருக்கடியான நிலைமைக்கு முகங்கொடுக்கும் என்று, சஜித் பலமுறை அரசாங்கத்தை எச்சரித்திருந்தார். ஆனால் அரசாங்கம் அதனைக் கண்டுக்கொள்ளவில்லை.

நாட்டை ஒருபோதும் முடக்கப்போவதில்லை எனக்கூறிய ஜனாதிபதி, தனிமைப்படுத்தல் விதிமுறைகள், பயணக்கட்டுப்பாடு என்ற பெயரிலும் நாட்டை முடக்கி வைத்திருக்கிறார். கொரோனா வைரஸ் தொற்றுக்கான சட்டத்திட்டங்கள் பாராளுமன்றத்துக்கு இல்லையா? எனவும் சமிந்த விஜேசிறி எம்.பி கேள்வி எழுப்பினார்.

கிழக்கு செயலணியில்

# 'முஸ்லிம்கள் அவுட்'

■ அப்துல்சலாம் யாசீம், ஏ.எம்.ஏ.பரீட், தீஷான் அஹமட், அ.அச்சுதன்

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத்தால் நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண கொவிட் -19 விசேட செயலணியில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு நேற்று (26) விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

கொவிட்- 19 நிலைமைகள் தொடர்பாக, பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்று, தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் விசேட செயலணியை அமைத்துள்ளார்.

பிரதான அமைப்பாளர் ஒருவரும், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கென தலா இருவருமாக மொத்தம் 7 பேர் இந்தச் செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும், இந்த 7 பேரில் ஒருவர் கூட முஸ்லிம் சமூகப் பிரதிநிதி இல்லை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, முஸ்லிம் சமூகமும் முக்கியமானது. கொவிட்- 19 அனர்த்தத்தில் அதிக பாதிப்புகளை முஸ்லிம்களும் சந்தித்துள்ளனர்.



இந்நிலையில், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் ஒன்றாவது, இந்த விசேட செயலணியில் சேர்க்கப்படாமைக்கு காரணம் என்ன?

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்றுள்ள 6 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், இப்போது அரசுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநரின் இந்த விசேட செயலணியில், குறித்து இந்த எம்.பிக்கள் என்ன சொல்லப் போகின்றார்கள்? இது தொடர்பில், அவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## 'கள்' பெண் கைது



■ கனகராசா சரவணன்

கள்ளு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண்ணொருவரை, 24 லீற்றர் கள்ளுடன் நேற்று (26) கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

விநாயகபுரம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றை, திருக்கோவில் பொலிஸ் நிலைய பெருங் குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ். சமந்த தலைமையிலான பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது, கள்ளு வியாபாரத்தில் ஈடுபட்ட 41 வயதுப் பெண்ணைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 3 கலன்களில் 24 லீற்றர் கள்ளைக் கைப்பற்றியுள்ளனர்.

1,000 தேசிய பாடசாலைத் திட்டம்;

## 13 பாடசாலைகளுக்கு வாய்ப்பு

■ ஏ.எம்.ஏ.பரீட்

1,000 மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் புதிதாக 13 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகப் பெயரிட முடிந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துக்கோரள தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கல்வியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதை அடுத்து, இந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், உள்கட்டமைப்பு வசதிகளை



மேம்படுத்துவதற்கு கல்வி உபகரணங்களை வாங்குவதற்கும் இப்பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் தலா 2 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், 10.06.2021 அன்று அவை தேசிய பாடசாலையாக மாற்றப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் 17 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நடமாடும் வர்த்தகருக்கு கட்டாய பி.சி.ஆர்

■ எம்.எஸ்.எம். ஹனீபா



பயணக் கட்டுப்பாடு அமலிலுள்ள காலப்பகுதியில் அனுமதி பெறாமல் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யும் நடமாடும் வியாபாரிகளுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படுமென அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.ஏ.அப்துல் லத்தீப், நேற்று (26) தெரிவித்தார்

“இக்காலப்பகுதியில் மரக்கறிகள், மீன் வகைகள், பேக்கரி உணவுப் பண்டங்கள் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் விற்பனையில் ஈடுபடும் உள்ளூர் நடமாடும் வியாபாரிகள் அனுமதி பெறாமல் பொருட்களை விற்பனை செய்வதாக அறியமுடிகின்றது.

“நடமாடும் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு, அனுமதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கை, பிரதேச செயலகங்கள் ஊடாக எடுக்கப்பட்டுள்ளது.

“இவ்வாறு அனுமதி பெற்ற வியாபாரிகள் கட்டாயம் பி.சி. ஆர் பரிசோதனை அறிக்கையைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், வியாபார நடவடிக்கையின் போது கையுறை, முகக்கவசம், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகள் கட்டாயம் பேணப்படல் வேண்டும்.

“இந்த நிபந்தனைகளை மீறிச் செயற்படும் வியாபாரிகளுக்கு எதிராக, தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாகக் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்” என, அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்கும் வர்த்தகர்களுக்கு ‘மூளை சரியில்லை’யென பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். இவ்வாறானவர்களால், அனுமதி பெற்ற வர்த்தகர்களைக் கூட, சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

## மட்டு. செயலகத்தில் தடுப்பூசி

■ வ.சக்தி, எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் அரச உயர் அதிகாரிகளுக்கு, சினோஃபார்ம் கொவிட்- 19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை, இராணுவத்தினரின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலகத்தில் நேற்று (26) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முதலாவது தடுப்பூசியை மாவட்டச் செயலாளரும், மாவட்ட கொவிட்- 19 தடுப்புச் செயலணியின் தலைவருமாகிய கே. கருணாகரனுக்கு ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் தடுப்பூசி



ஏற்றப்பட்டது.

மக்களுக்கான சேவையைத் தங்கு தடையின்றி வழங்க வேண்டுமென்பதற்காக மக்கள் மத்தியில் கடமையாற்றிவரும் பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலகத்தின் கிளைத் தலைவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## குருதிக் கொடைக்கு அழைப்பு

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று ஆதார வைத்திசாலையின் இரத்த வங்கியில், இரத்தம் பற்றாக்குறையாக இருப்பதால், ஆர்வமுள்ளவர்கள் முடியுமான வரை, உடனடியாக வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று இரத்ததானம் செய்யுமாறு, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் விசேட பொது வைத்திய நிபுணர் டொக்டர் அஹமட் பரீட் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

வடக்கில் காற்று;

# பலத்த சேதம்

■ என்.ராஜ், மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன், செ.கீதாஞ்சன், க.அகரன், எஸ். றொசேரியன் லெம்பேட்







தற்போது நிலவி வரும் கடும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக, வடக்கின் பல பாகங்களிலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### யாழ்ப்பாணம்:

நேற்று (26) வரையான கடந்த 24 மணிநேரத்தில், யாழ்ப்பாணத்தில் வீசிய கடும் காற்றால், 46 குடும்பங்களைச் சேர்ந்த 172 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த மாவட்ட பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

அத்துடன், 42 வீடுகள் பகுதியளவிலும் இரண்டு வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. சிறுமிகள் இருவர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

குறிப்பாக, காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை, காரைநகர், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்

### முல்லைத்தீவு:

முல்லைத்தீவு மாவட்டத்தில், நேற்று முன்தினம் (25) வீசிய கடும் காற்றால் நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், பல பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

ஒட்டுசுட்டான், மாங்குளம் கிராமங்களில் உள்ள இரண்டு வீடுகளும், பேராற்று கிராமத்தில் ஒரு வீடும், விசுவமடு - தொட்டியடி பகுதியில் ஒரு வீடும் இவ்வாறு பகுதியளவில் சேதமடைந்துள்ளன என, முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ். லிங்கேஸ்வரகுமார் தெரிவித்தார்.

அத்துடன், பல இடங்களில் வீசிய கடும் காற்றால் மரங்கள் மற்றும் விவசாயத் தோட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும், அவர் கூறினார்.

மேலும், புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியின் கெருடமடுப் பகுதியில் உள்ள வீதியின் குறுக்கே, காஞ்சிரமரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில், சில மணி நேரம் அந்த வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

### கிளிநொச்சி:

கிளிநொச்சி மாவட்டத்தில் வீசிய கடும் காற்றால், நேற்று முன்தினம் (25), புலோப்பளை பிரதான வீதியில் உள்ள மின்கம்பத்தின் மீது தென்னை மரமொன்று முறிந்து வீழந்துள்ளது.

இதனால், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அறத்திநகர், அல்லிப்பளை, புலோப்பளை கிழக்கு, மேற்கு, அரசன்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்குரிய மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

அத்துடன், முரசுமோட்டை பிரதேச சபைக்கு உட்பட்ட தர்மபுரம் பொதுச் சந்தையின் கூரை, காற்றால் முற்றுமுழுதாக தூக்கி வீசப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

### வவுனியா:

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் (25) கடும் காற்று வீசியதன் காரணமாக, நெடுங்கேணி, ஒலுமடு பகுதியில், விவசாயி ஒருவரால் செய்கை பண்ணப்பட்டிருந்த 600க்கும் மேற்பட்ட பப்பாசி செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடும் காற்றால், வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் மேற்கொள்ளும் பகுதியில், நேற்று முன்தினம் (25), பாரிய மரக்கிளை ஒன்று முறிந்து விழுந்துள்ளது.

போராட்டப்பந்தலில் சிலர் இருந்த நிலையில், அதிர்ஷ்டவசமாக எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை.

### மன்னார்:

மன்னார் மாவட்டத்தில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 59 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, மன்னார் மாவட்ட அனார்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரட்ணம் திலீபன் தெரிவித்தார்.

மேலும், மாவட்டத்தில் 13 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அதேவேளை, 2 சிறிய கடைகளும் சேதமடைந்துள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பயிர்களும் அழிவடைந்துள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் (25) கடும் காற்றுடன் கூடிய கடல் கொந்தழிப்பின் காரணமாக, மீனவர்களின் வாடிகள் தூக்கி வீசப்பட்டதுடன், படகுகள், மீன்பிடி வலைகளும் சேதமாகியுள்ளன.

சௌத்பார், தாழ்வுப்பாடு, ஓலைத்தொடுவாய், வங்காலை அச்சங்குளம், அரிப்பு உள்ளிட்ட பல மீனவக் கிராம கடல் பகுதிகளில், தொடர்ந்து அதிவேக காற்று மற்றும் கடல் கொந்தழிப்பு காணப்படுவதால், கடல் நீர் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள்ளும் புகுந்துள்ளது.

அதேநேரம், மன்னார் - சௌத்பார் பகுதியில் உள்ள கடற்படை முகாமும் சேதமடைந்துள்ளது.


இந்நிலையில், கடும் காற்றால் ஏற்பட்ட சேத விவரங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலாளர்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு, இடம் அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபத்தில்

## கிராம அலுவலர் தம்பதி மரணம்

■ மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

முழங்காவில், பல்லவராயன் கட்டுச் சந்தியில், இடம்பெற்ற விபத்தில், பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முழங்காவிலில் கிராம அலுவலராகப் பணியாற்றிய பாலசிங்கம் நகுலேஸ்வரன் என்பவரும் அவரது மனைவியும் உயிரிழந்துள்ளனர்.



**“ பல்லவராயன் கட்டுச் சந்தியில், விபத்துக்குள்ளாகி வீதியில் கிடந்துள்ளனர். விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், விபத்தால் உயிரிழந்தனரா, யானை தாக்கி இறந்தனரா என்பது தொடர்பில் விசாரணைகள்**

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, பல்லவராயன் கட்டுச் சந்தியில் வைத்து, இவ்விருவரும் விபத்துக்குள்ளான நிலையில், வீதியில் கிடந்துள்ளனர்.

இதனை அவதானித்த பிரதேசவாசிகள், இராணுவத்தின் உதவியுடன் இருவரையும் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதன்போது, குறித்த கிராம அலுவலகர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், அவரது மனைவி அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது, சிகிச்சை பலனின்றி, அவர் உயிரிழந்துள்ளார்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்த முழங்காவில் பொலிஸார், இவர்கள் விபத்தால் உயிரிழந்தனரா அல்லது யானை தாக்கி இறந்தனரா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினர்.

காரைநகரில் ஒரு பகுதியை

## ‘முடக்கத் தீர்மானம்’

■ என்.ராஜ்



காரைநகரில் உள்ள ஒரு கிராமத்தை முடக்குவதற்கு அனுமதி கோரி, கொரோனா தடுப்பு மத்திய நிலையத்துக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காரைநகர் ஜே47 கிராம சேவகர் பிரிவின் சயம்பு வீதி உள்ளடங்கலான ஒரு பகுதியில், அதிகளவிலான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்தே, அந்தப் பகுதியை முடக்குவதற்கான விண்ணப்பத்தை, யாழ். மாவட்டச் செயலாளருக்கு சுகாதாரப் பிரிவினர் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த விண்ணப்பம் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அப்பகுதியைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இடர்கால நிவாரண உதவி வழங்கப்படவுள்ளன என யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

# ‘கொஞ்சம் கவனிக்கவும்’

■ ரா.கமல்

நிகழ்நிலை கற்றலுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காது வெறும் சுற்றறிக்கைகள், சுற்றுநிருபங்களை அனுப்பி ஆசிரியர்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்கும் செயற்பாட்டை, கல்வி அமைச்சு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியில், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக, கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸூக்கு விடுத்துள்ள வேண்டுகோளிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துரைத்துள்ள அவர், “கொரோனா தொற்றுப் பரவலுக்கு மத்தியிலும் 45 இலட்சம் மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு, பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், ஆசிரியர்கள் நிகழ்நிலை (Online) கற்பித்தலில் ஈடுபடுவது தொடர்பாக, புதிதாகக் கூற வேண்டிய தேவையில்லை.

இவ்வாறு இருக்கையில், அவர்களுக்கான எவ்வித கொடுப்பனவுகளையோ, வசதி வாய்ப்புகளையோ பெற்றுக்கொடுக்காமல், அமைச்சின் செயலாளரின் ஊடாக சுற்றறிக்கைகள், கடிதங்களை அனுப்பி ஆசிரியர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான மேற்பார்வைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை, இலங்கை ஆசிரிய சேவை சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இத்தகைய பொறுப்பற்ற நவடிக்கைகளை நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறது.

நிகழ்நிலை கற்பித்தலின் போது, மாணவர்களின் பயிற்சிகளைத் திருத்துவதற்கு அதிக நேரத்தை செலவழிக்க நேரிடுவதோடு, ஆசிரியர்களுக்கு அழுத்தமாகவும் மேலதிக சுமையாகவும் அமைகிறது” என்றும் தெரிவித்துள்ளார்.

# அதிபர் காலமானார்

■ ஆ.புலியரசன், நடராஜா மலர்வேந்தன்

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பசறை இல.02. தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் எம்.வாசுதேவன், உடல் நலக்குறைவு குறைவு காரணமாக, கொழும்பு வைத்தியசாலையொன்றில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று (26) காலை இயற்கையெய்தினார்.

மீதும்பிட்டிய ஏ பிரிவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மீதும்பிட்டிய பகுதியில், ‘வைட்ரோஸ்’ என்ற இளைஞர் கழகத்தை ஸ்தாபித்து, இப்பகுதி இளைஞர்களின்



விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு உதவி புரிந்தார். அத்துடன் பிளேன் இன்டர்நெஷனல் நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு சமூக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளார்.

இறுதியாகத் தான் அதிபராகக் கடமையாற்றிய அம்மனிவத்தைப் பகுதியில், ‘அமுதம் மக்கள் அபிவிருத்தி மன்றம்’ என்ற சமூக நலன் மேம்பாட்டு அமைப்பின் செயற்பாடுகளுக்கு ஆலோசகராக இருந்து காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இவர், ஹொப்டன் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம், மீதும்பிட்டிய இல-01 தமிழ் வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றி உள்ளதோடு, தன்னுகை தமிழ் வித்தியாலயத்திலும் சில காலம் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

## வீதி தாழிறங்கியது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

கொத்மலை ஹரங்கலவுக்கு ஊடாக நாவலப்பிட்டிக்குச் செல்லும் வீதியின் ஒரு பகுதி, நேற்று (26) காலை தாழிறங்கியுள்ளது. கொத்மலை நீர்த்தேக்கத்துக்குத்துக்கு அருகிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 6 அடி நிலம் தாழிறங்கியுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

இதன் காரணமாக, கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று, நீர்த்தேக்கப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். மேற்படி, வீதி வழியாக வாகனங்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## பாதை சீர்கேடு; பொதுமக்கள் அவதி



■ பா.பாலேந்திரன்

டயகம் ஈஸ்ட் இலக்கம் 3, 15 ஆம் இலக்க பாதை மிக மோசமான நிலையில் காணப்படுவதால் அந்தப் பாதை வழியாகப் போக்குவரத்துச் செய்வதில் பாரிய இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பாதையானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், மழை காரணமாக சேற்றுநீர் நிரம்பிக் காணப்படுவதால், வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாக, பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இப்பகுதி இளைஞர்கள் இணைந்து, பாதையில் இருக்கும் குழிகளை, தற்காலிகமாக மண் இட்டும் நிரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பாதையைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சீரற்ற வானிலையால்

## மத்திய மாகாணத்தில் 400 பேர் பாதிப்பு

■ மொஹொமட் ஆஸிக், ஏ.ஏ.எம். பாயிஸ்



சீரற்ற வானிலை காரணமாக மத்திய மாகாணத்தின் நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களில் 97 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக கண்டி மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 124 பேரும் நுவரெலிய மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 276 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில், நுவரெலிய பிரதேச செயலகப் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 79 பேரும் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 197 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளயே பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும், யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவில் 04 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும், தெல்தொட்டைப் பிரதேச செயலக பிரிவில் 04 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும், உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் 02 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும், ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் 01 குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும், மினிப்பே பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், பாத்தஹேவாஹெட பிரதேச செயலகப் பிரிவில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேரும், பஸ்பாகே கோரளய பிரதேச செயலகப் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் உட்பட கண்டி மாவட்டத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 124 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கண்டி மாவட்டத்தில் 30 வீடுகளும் நுவரெலிய மாவட்டத்தில் 12 வீடுகளும் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக, இரத்தினபுரி மாவட்டத்தில் 1,739 பேர் இடம்பெயர்ந்துள்ளதுடன் இவர்கள் அனைவரும் 5 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி ஜென்னத் ஜும்மா பள்ளி வாயல், இரத்தினபுரி சிவன் கோவில், அங்கம்மன விகாரை, சைலதலாராம விகாரை, எலபாத்த மகா வித்தியாலயம் ஆகிய 5 முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று, இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலினி லொகுபோதாகம தெரிவித்தார்.









## ஓராண்டு கடந்தது...

■ துவாரகஷான், பி.கேதீஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி, நுவரெலியா பிரதேச சபையில், நேற்று (26) விசேட அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜின் ஏற்பாட்டில் பொதுச் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெற்ற இந்நிகழ்வில், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, தீபங்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் கோவிலில் விசேட பூஜை இடம்பெற்றதுடன், பிரதேச சபை வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

மேலும், நானுஓயா ரதெல்ல கீழ், மேற்பிரிவு பிரிவுகள், எடின்புரோ, டெஸ்போட், கிரிமிட்டிய, பிளக்பூல் மீப்பிலிமான, சென் ஜோன்ஸ், கந்தப்பளை ஆகிய பகுதிகளில், கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, உலருணவுப் பொருட்களும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, தலவாக்கலை-லிந்துலை நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ரொசான் ராஜசேகர் தலைமையில் தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஊடாக

## நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைகளுக்கு உதவி

■ துவாரகஷான்

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவிவரும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தினூடாக சுமார் 70 இலட்சம் ரூபாய் செலவில் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக, மன்றத்தின் போஷகர்களில் ஒருவரான ஆர்.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில், நுவரெலியா மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் போதிய வசதிகள் இல்லை என்பதை வைத்திய அதிகாரிகளினூடாகக் கண்டறிந்ததாகத் தெரிவித்தார்.

இதனால் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு, வைத்தியசாலைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

முதற்கட்டமாக மஸ்கெலியா, பொகவந்தலாவை, டிக்கோயா, கொட்டகலை, லிந்துலை ஆகிய ஐந்து வைத்தியசாலைகளுக்கு உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

மலையக மன்றத்தினூடாக உதவிகளை மேற்கொள்ள விரும்புவர்கள், 077-7155 586, 077-3495 630, 077-7631 079 ஆகிய அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு, எமது சேவையுடன் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

## ஸ்டாபோட் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

■ நீலமேகம் பிரசாந்த்

இராகலை ஸ்டாபோட் தோட்டத்தில், கடந்த வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்ற டிரக்டர் விபத்தில் பாதிக்கப்பட்ட 21 தொழிலாளர்களுக்கும் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தோட்டத் தொழிலாளர்களின் சங்கத்தின் நுவரெலிய மாவட்டச் செயலாளர் வி.புஸ்பானந்தன், மத்துரட்ட பெருந்தோட்டக் கம்பனி நிர்வாகத்திடம் கலந்துரையாடி பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப்பொருள்களை வழங்கி வைத்தார்.

விபத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் இதன்போது தோட்ட நிர்வாகத்தைக் கோரினார்.



# மண்பானையை உடைத்த மாதனமுத்தாவும் ஊசி குத்தும் அரசாங்கமும்

தீராத பிரச்சினைகளையெல்லாம் தனது புத்திசாதுரியத்தால் தீர்த்துவைக்கும் சிறந்த அறிஞராக ஊருக்குள் மதிக்கப்படுபவர் மாதனமுத்தா, ஒருநாள், கிராமத்து வீடொன்றில், மாட்டுக் கன்று, மண்பானைக்குள் தலையைவிட்டு, மாட்டிக்கொண்டது.

முயற்சிகள் செய்தும், கன்றிலிருந்து பானையை அகற்ற முடியவில்லை. பிரச்சினையைத் தீர்த்துவைக்க, மாதனமுத்தா அழைக்கப்பட்டார். அவரது, ஆலோசனைப்படி, கன்றின் கழுத்தோடு வெட்டப்பட்டது. இப்போது, பானைக்குள் இருக்கும் கன்றின் தலையை எடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பானையை உடைத்துவிட மாதனமுத்தா, ஆணையிட்டார். பானை உடைத்து, கன்றினது தலை மீட்கப்பட்டது. ஊர்மக்கள் கரவொலி எழுப்பி, மாதனமுத்தாவின் அறிவாற்றலைப் பாராட்டி, வியந்தனர்.

மாதனமுத்தாவின் இத்தகைய முடிவுகளைப் போலவே, கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கத்தில் உள்ள அதிகார மட்டங்களால் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

குறிப்பாக, தடுப்பூசிச் செலுத்தும் நடவடிக்கையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்கள், அரசாங்கத்தின் அக்கொள்கைக்கு மாறாக, புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்து, மருத்துவப் பணியாளர் சங்கங்கள், கிராமசேவை உத்தியோகத்தர் சங்கம் ஆகியவை, தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. கொரோன வைரஸ் பாதிப்பில் நான்காம் நிலை என்ற ஆபத்துக் கட்டத்தில் இருக்கும் நிலைவரத்தில், இத்தகைய பணிப்பகிஷ்கரிப்புகள், நாட்டைப் பேராபத்துக்குள் சிக்கவைத்துவிடும்.

பொதுமக்ககளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவோரில் அநேகர், இன்னமும் முதலாவது டோஸைக் கூட எடுக்கவில்லை. ஆனால், அரசியல், அதிகார செல்வாக்கு மிக்கவர்கள் பலர், இரண்டாது டோஸையும் எடுத்துவிட்டனர் என, சம்பந்தப்பட்ட தரப்புகளால் குற்றம்சாட்டப்படுகின்றது.

இதற்குக் காரணம், தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளுக்குள் 'அரசியல்' தலையை நுழைத்தமை ஆகும்.

தற்போது தடுப்பூசி விவகாரங்களைக் கையாள்வதற்காக, வைத்திய நிபுணர் ஒருவர் பகுதி நேரமாகவே நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டைப் பேராபத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக அல்லும்பகலும் உழைக்க வேண்டிய ஒரு பொறுப்பு மிக்க பதவிக்கான நியமனம், பகுதிநேர நியமனமாக அமைந்திருக்கும் அளவுக்கு, தடுப்பூசி விவகாரத்தில், அரசியல் தலையீடு ஆழவேரோடி உள்ளது.

எதிர்க்கட்சிகளின் அரசியல் நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுகளுக்கு அப்பால், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து, மக்களும் அதிருப்பதிகளையும் வெறுப்பையும் வெளிப்படுத்தியே வருகின்றனர். ஏனென்றால், தடுப்பூசி விவகாரத்தில், பொதுமக்கள் பல்வேறு தந்திரோபாயங்கள் மூலம் ஏமாற்றப்படுள்ளனர். அரசாங்கத்துடன் அதிகாரத்தில் உள்ளவர்களும் அவர்களின் உறவினர்களும் ஆதரவாளர்களுமே தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டிருக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மாதனமுத்தாவின் முடிவுகளையே எடுக்கும் இந்தக் கீழ்நிலையிலிருந்து விடுபட்டு, அரசியல் தலையீடுகள் இன்றி, வெற்றிகரமாகப் பெருந்தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிஎன்ன என்பதே, இன்று இனம், மதம், பேதங்களின்றி, இலங்கை மக்கள் முன்னெழுந்துள்ள கேள்வியாகும். இதையே நாங்களும் பிரதிபலிக்கின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# கொரோனா கட்டுப்பாடுகளும் குளறுபடிகளும்




புருஜோத்தமன் தங்கமயில்


கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலம், மக்களை நாளாந்தம் நெருக்கடிக்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை, நாளொன்றுக்கு 3,000 என்கிற அளவைத் தொட்டிருக்கின்றது; உயிரிழப்புகளும் 30 என்கிற அளவில் ஒவ்வொரு நாளும் பதிவாகின்றது. உத்தியோகபூர்வ அறிவிப்புக்கு அப்பால், தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை, இன்னும் அதிகமிருக்கலாம் என்பது, சுகாதாரத்துறையினர் உள்ளிட்ட தரப்புகளின் அச்சமாகி இருக்கிறது.

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு விதிகள், கடந்த இரண்டு வாரங்களாக மீண்டும் அமலுக்கு வந்திருக்கின்றன. மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையோடு ஆரம்பித்த கட்டுப்பாடுகள், தற்போது வீடுகளுக்குள் மக்களை முடக்கும் அளவுக்குச் சென்றிருக்கின்றது; கிட்டத்தட்ட ஊரடங்கு போன்றதொரு நிலை.

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு விதிகள் என்பது, அச்சமூட்டும் பெருந்தொற்றுக் காலத்தில் தவிர்க்க முடியாதவை. ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் பாரிய குளறுபடிகளைச் செய்து வருகின்றது. அதனால், மக்கள் இன்னும் இன்னும் பாதிப்புக்குள்ளேயே சென்றுகொண்டு இருக்கின்றார்கள்.

மூன்று நாள்கள் தொடர் முடக்கத்துக்குப் பிறகு, செவ்வாய்க்கிழமை (25) அத்தியாவசிப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக, மக்களை வெளியில் செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருந்தது.

குறிப்பாக, நடந்து சென்று பொருட்களைக் கொள்வனவு செய்யுமாறு பணித்தது; வாகனங்களில் பயணிப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தியது. அதன்மூலம், நடந்து செல்லக் கூடிய, சில நூறு மீற்றர் தூரத்துக்குள் இருக்கும் கடைகளில் மாத்திரம், பொருட்களைக் கொள்வனவு செய்யுமாறு வலியுறுத்துவதே, அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

ஆனால், இவ்வாறான கட்டுப்பாடுகள், அறிவுறுத்தல்கள் போன்றவை, நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களினதும் தேவைகள், நெருக்கடிகளை உணர்ந்து கொண்டா விதிக்கப்படுகின்றன என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், கொழும்பைப் பிரதானப்படுத்தியே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திலும், கொழும்பிலுள்ள மக்களையே பிரதானமாக முன்னிறுத்தி, முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

கொரோனாவுக்கான தடுப்பூசி செலுத்துவதாக இருந்தாலும், அத்தியாவசிய தேவைகள் பற்றிய கரிசனை என்றாலும் கொழும்பில் வாழ்பவர்களைக் குறித்தே அதிக அக்கறை வெளிப்படுத்தப்படுகின்றது. இதனால், கொழும்பிலிருந்து பல நூறு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள கிராமங்களில் வாழும் மக்கள், நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வருகின்றது.

நடந்து சென்று பொருட்களை வாங்குங்கள் என்பது, கொழும்பு போன்ற வசதி வாய்ப்புகள் அதிகமுள்ள நகரப் பகுதிகளுக்குப் பொருத்தமாக இருக்கும். ஆனால், சில குடும்பங்கள் வாழும் கிராமங்கள், நாட்டில் இன்னமும் உண்டு. அங்கு ஒருசில சின்னக் கடைகளைத் தவிர வாரக் கணக்கில் பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடிய வாய்ப்புகள் இருக்காது.

அவ்வாறான தருணத்தில், தங்களது கிராமங்களில் இருந்து, அடுத்துள்ள நகரப் பகுதிகளை நோக்கி மக்கள் செல்ல வேண்டி ஏற்படும். அந்த நகரப் பகுதி, சிலவேளை 20 கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கலாம்.

இப்படியான கிராமங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நூற்றுக்கணக்கில் உண்டு; தென் இலங்கையிலும் ஆயிரக் கணக்கில் உண்டு. அந்தக் கிராமங்களில் வாழும் மக்கள், தமது அத்தியாவசியத் தேவைகளை, நடத்து செல்லக் கூடிய தூரத்துக்குள் எவ்வாறு நிறைவேற்றுவது?

அத்தியாவசித் தேவைகளுக்காக அடுத்துள்ள நகரப் பகுதிக்கு சென்ற இலட்சக் கணக்கான மக்கள், கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினராலும் பொலிஸாராலும் திருப்பி அனுப்பப்பட்டார்கள். வங்கிச் சேவைகளை அணுகுவதற்குக் கூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஏன், அடகு வைத்து வாழ்வாதாரச் சுமைகளை சமாளிக்கக் கூடியவர்களுக்குக் கூட, அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இன்னொரு பக்கம், கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்தாலும் அந்தக் கட்டுப்பாடுகள், வசதி வாய்ப்புகள் உள்ளவர்களுக்கானது இல்லை என்கிற நிலை பேணப்படுகின்றது. சொகுசு வாகனங்கள் உள்ளிட்ட விலை அதிகமுள்ள வாகனங்களில் செல்பவர்கள் பொலிஸாரினாலோ, இராணுவத்தினராலோ நகரப் பகுதிகளில் நிறுத்தப்படுவதில்லை.

அத்தியாவசியப் பொருட்கள் மாத்திரமல்ல, ஆடம்பரத்துக்குத் தேவையான பொருட்களும், எவ்வளவு தூரத்துக்கு அந்த வாகனங்களில் சென்றும் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுகின்றது. அதுவே, மோட்டார் சைக்கிள்களோ, ஓட்டோக்களிலோ செல்லும் சாதாரண மக்கள், பாதுகாப்புத் தரப்பினரின் பாரிய நெருக்கடியைச் சந்திக்கிறார்கள். அதிக தருணங்களில், அவர்களிடம் விளக்கம் ஏதும் கேட்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

> மக்கள் கொத்துக் கொத்தாகச் செத்து விழும் நிலை, இலங்கையிலும் உருவாகிவிடலாம். அரசாங்கம், சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்

கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள், வாரக் கணக்கில் தொடரும் அனைத்துத் தருணத்திலும் இரு காட்சிகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஒன்று, அடகு நிலையங்களில், ஆயிரக்கணக்கான மக்கள் அதிகாலையிலேயே வரிசையில் காத்து நிற்பது.

இன்னொன்று, பெரிய வாகனங்கள், அனைத்துப் பல்பொருள் அங்காடிகளையும் மொய்த்திருப்பது. அந்தப் பல்பொருள் அங்காடிகளில் அரிசி, பருப்பு தொடங்கி ஐஸ்கிறீம்கள் வரையில் வழித்துத் துடைக்கப்பட்டு, கொள்வனவு செய்யப்பட்டு செல்லப்படுகின்றது. அப்படிக் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள், அதிக தருணங்களில் சில மாதங்களுக்கு போதுமானதாக இருக்கின்றன.

அடகு நிலையங்களில் காத்திருந்து பெற்ற பணத்தைக் கொண்டு, பல்பொருள் அங்காடியை அடைவதற்கே மதியம் தாண்டிவிடும் சூழல்; அங்கு அரிசி, பருப்பு, மரக்கறிகள் என்று உணவுப் பொருட்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்ட நிலையில், சாதாரண மக்கள் அவஸ்தைப்பட வேண்டி வருகின்றது.

யாராக இருந்தாலும், தமது தேவைக்குப் போதுமானதைக் கொள்வனவு செய்து செல்வதுதான், நெருக்கடியான காலகட்டத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டிய மனிதம். அதுதான், மற்றவர்களைக் குறித்துக் கொஞ்சமாவது சிந்திக்கக் கூடிய யாரும் செய்ய வேண்டியது.

ஆனால், அவ்வாறான சிந்தனை என்பது, மக்களிடம் பெரியளவில் இல்லை என்பதுதான், இன்னுமின்னும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. பகுத்துண்டு வாழ்தல் என்பது, தன்னிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்வது மாத்திரமல்ல; தனது தேவைகளுக்கு அதிகமானவை, தேவையற்று வீணடிக்காது மற்றவர்கள் பயன்படுத்தும் சூழலைப் பேணுவதுமாகும். ஆனால், அவ்வாறான கட்டத்தைப் பலரும் தாண்டி, நின்று சுயநலத்துக்குள் உழல்கிறார்கள்.

அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்கும் போது, அனைத்துத் தரப்பு மக்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். ஒரே நாளில் முழு நாட்டையும் திறந்து சிக்கல்களை உருவாக்காது, பகுதி பகுதியாக ஒவ்வொரு நாளும் திறந்து, அத்தியாவசிய தேவைகளுக்கு அனுமதிக்க வேண்டும். அப்படியான கட்டம் தேவையற்ற நெருக்கடிகளைக் குறைக்கும்.

இல்லையென்றால், பொது முடக்கம் பலன்களை விளைவிக்காது. ஏனெனில், தொடர்ச்சியாக மூன்று, நான்கு நாள்கள், வீடுகளுக்குள் முடக்கப்படும் மக்கள், ஐந்தாவது நாளில் கடைகளிலும் சந்தைகளிலும் அதிகமாகத் திரள்கிறார்கள். அப்போது, தொற்றுக்கான வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

அதனால்தான், ஒவ்வொரு பிரதேசத்தையும் ஒவ்வொரு நாளில் திறந்து, அத்தியாவசிய தேவைகளுக்கு அனுமதிப்பது என்பது, நெருக்கடிகளையும் மக்கள் திரட்சியையும் பாரியளவில் கட்டுக்குள் வைத்திருக்கும்.

இல்லையென்றால், கொரோனா வைரஸ் தொற்று, இன்னும் இன்னும் அதிகரித்தே செல்லும். அப்போது, வடக்கு இந்தியாவில் மக்கள் கொத்துக் கொத்தாகச் செத்து விழும் நிலை, இலங்கையிலும் உருவாகிவிடலாம். ஓர் அரசாங்கமாக, இவற்றை எல்லாம் குறித்து, சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

காரிருளில் ஒளி தேவைப்படுகிறது. கும்மிட்டில் நடக்க, எல்லோருக்கும் பயம் வருவது இயற்கை. அதுபோல, இருண்ட மனதைப் போக்கினால்த் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புதுஉலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல்வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும்; செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்குபுரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குரங்குகளால் பயிர்ச்செய்கைகளுக்கு பேரழிவுகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில், உப உணவுப் பயிர்ச் செய்கைகளுக்கு அழிவுகளை ஏற்படுத்துவதில், குரங்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், விவசாயத் திணைக்களம் என்பன இணைந்து, பயிர்ச் செய்கைக் கூட்டங்களை நடத்தி, நெற்செய்கையுடன் கூடுதலாக உப உணவுப் பயிர்ச் செய்கையில், விவசாயிகள் ஈடுபட வேண்டும் என ஆலோசனைகள் வழங்கி வருகின்றன.

இத்தகைய ஆலோசனைகளை ஏற்று, பயிர்ச் செய்கைகளில் விவசாயிகள் ஈடுபடும் நிலையில், இரவில் யானைகளும் பகலில் குரங்குகளும் பயிர்களை அழித்து வருகின்றன. கிராமங்களில் இருந்து, தூர இடங்களுக்கு குரங்குகளையும் யானைகளையும் கலைத்து விடுவதற்கு, வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மாவட்டம், பிரதேச செயலக மட்டங்களில் நடைபெறும் கூட்டங்களில், விவசாயிகளால் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வரும் நிலையிலும், இதுவரை தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம், தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என குரங்குகளால் பயிர் அழிவுகளை எதிர்கொண்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்





வேலூர்

# சுமையுடன் நடந்த குடும்பம்

ஊரடங்கு காரணமாக வாகனப் போக்குவரத்து அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், ரெயில்கள் மட்டும் இயக்கப்படுகின்றன. இந்த நிலையில் பெங்களூரில் இருந்து ஒரு தம்பதியினர் காட்பாடிக்கு ரெயிலில் வந்தனர்.

வேலூர் அடுத்த கணியம்பாடிக்கு ஒரு துக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்தவர்கள் காட்பாடியிலிருந்து கணியம்பாடி செல்ல ஆட்டோ இருக்கிறதா? என்று பார்த்தனர். அப்போது நோயாளிகளை ஏற்றிச் செல்ல அனுமதி வாங்கியிருந்த ஒரு சில ஆட்டோக்கள் ஓடின. ஒரு ஆட்டோ செலுத்தினரிடம் கணியம்பாடி செல்ல வேண்டும் என்று கூறி கட்டணம் கேட்டனர். அவர் ரூ.3 ஆயிரம் கேட்டுள்ளார். காட்பாடியில் இருந்து கணியம்பாடி 20 கி.மீ. தூரத்திலுள்ளது. இதற்கு ரூ.3 ஆயிரமா? என்று அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஊரடங்கு நேரத்தில் எந்தவித போக்குவரத்தும் இல்லையே என வருந்தினர். பின்னர் தாங்கள் கொண்டு வந்த பைகள், குழந்தைகளுடன் 20 கி.மீ தூரம் நடந்தே கணியம்பாடிக்கு சென்றனர்.

திருச்சி

# விவசாயிகள் மறியல் போராட்டம்

இந்திய அரசாங்கத்தைக் கண்டித்து தேசிய-தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் திருச்சியில் மறியல் போராட்டத்திலும் பல்வேறு விவசாய சங்கங்கள் கறுப்பு தினம் அனுஷ்ரிப்பதிலும் ஈடுபட்டனர்.

வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்தி, டெல்லியில் விவசாயிகள் 6 மாதங்களுக்கு மேலாகப் போராடி வருகின்றனர். ஆனால், மத்திய அரசாங்கம் விவசாயிகள் போராட்டத்தைக் கண்டுகொள்ளவில்லை என்று கூறி, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்துக்குத் தலைமை வகித்த சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.அய்யாக்கண்ணு, செய்தியாளர்களிடம் கூறும்போது;

"பிரதமர் மோடி, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்



வழங்கப்படும். விவசாய விளை பொருட்களுக்கு இலாபகரமான விலை வழங்கப்படும். நதிகள் இணைக்கப்படும். விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்றார். வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள், டெல்லியில் 6 மாதங்களுக்கு மேலாகப் போராடி வருகின்றனர். ஆனால், விவசாயிகள் போராட்டத்தை மத்திய அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. இந்த நிலையில், இந்நாளை 'கறுப்பு தினமாக' அனுஷ்ரித்தாக பல்வேறு விவசாய சங்கங்கள் நேற்று அறிவித்திருந்தன. இந்த போராட்டத்துக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன என்றார்.

இதேவேளை, இந்திய தலைநகர் டெல்லியையொட்டி உத்தர பிரதேச எல்லையில் அமைந்துள்ள காசியாபாத் பகுதியில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக ஏ.என்.ஐ. முகாமை, செய்தி வெளியிட்டுள்ளது.




புதுடெல்லி

# நீதிமன்றில் 'வாட்ஸ்அப்' முறையீடு

சமூக ஊடகங்களுக்கு மத்திய அரசாங்கம் விதித்த புதிய சட்டவிதிகளுக்கு எதிராக, வாட்ஸ்அப் நிர்வாகம் புதுடெல்லி உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது.

'டுவிட்டர், பேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டர்கிராம்' போன்ற நிறுவனங்கள் தங்களது பயனாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க, தலைமை நடவடிக்கை அதிகாரி, சிறப்புப் பணி தொடர்பு நபர், உள்ளுறை குறைதீர் அதிகாரி ஆகியோரை நியமிக்க வேண்டும் எனப் புதிய விதிகளை மத்திய அரசாங்கம் பெப்ரவரி 25 வெளியிட்டது.

இந்த விதிகளுக்கு இணங்கிச் செயல்பட சமூக ஊடகங்களுக்கு மூன்று மாத அவகாசம் அளிக்கப்பட்டது. 'விதிகளுக்கு இணங்காத நிறுவனங்களுக்கு எதிராக தடை உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த அவகாசம் மே 25ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து, 'டுவிட்டர், பேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டர்கிராம்' உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூடப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

அரசாங்கத்தின் புதிய சட்ட விதிகளுக்கு எதிராக, வாட்ஸ்அப் நிர்வாகம் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



## சிரமப்படும் குளிர்வித்த 'விசிறி' தாத்தா

கோவில் கோவிலாக திருவிழாக்களுக்கு சென்று விசிறி வீசும் 96 வயது 'விசிறி தாத்தா' நடராஜன், தற்போது கோவில்கள் மூடப்பட்டதால் திருவிழாக்கள் எதுவும் இல்லாமல் அன்றாட வாழ்வாதாரத்துக்கே சிரமப்பட்டு வருகிறார்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு வழக்கமாகச் செல்கிற எல்லோரும், 'விசிறி' தாத்தா நடராஜனை பார்த்திருப்பார்கள். புதிதாக செல்பவர்கள், அவரை ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். அவருடைய தொழிலுக்கும் கொரோனா ஊரடங்கு ஆப்பு வைத்துவிட்டது.

சாமி தரிசனத்துக்காகக் கோவில் வளாகத்துக்குள் வரும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் வியர்த்துக் கொட்டும் நேரத்திலும் புழுக்கத்தால் மூச்சுவிடக் கூட முடியாமல் பக்தர்கள் தவிக்கும்போதும் அவர்கள் அருகே சென்று 'விசிறி'தாத்தா நடராஜன், தான் கையில் பிடித்திருக்கும் மயில்தோகை விசிறியால் போதும் போதும் என்றளவுக்கு விசிறிக் குளிர்விப்பார்.

அதற்காக சன்மானம் எதுவும் அவர் கேட்கமாட்டார். கோவில் தரிசனம் நேரம் முடிந்தவுடன் சிறுசிறு கடைகளில் வேலை செய்து வாழ்க்கை ஓட்டி வந்தார். கோவிலுக்குள் யாரிடமும் கை நீட்டி உதவி கேட்கமாட்டார்.

"உடலில் நடமாடும் தெம்பு இருக்கும் வரை இந்தச் சேவையை செய்வேன். தற்போது விசிறி வீசவும் முடியவில்லை. வேலைக்குப் போகவும் முடியவில்லை. கோவில்கள் திறக்காவிட்டாலும் அன்றாடம் கடவுள் என்னைக் காப்பாற்றுகிறார்" என்றார்.


மும்பை

# விமானத்தில் தனியாக பறந்த பயணி

மும்பையிலிருந்து துபாய்க்கு மே மாதம் 19ஆம் திகதி புறப்பட்ட 360 இருக்கைகள் கொண்ட விமானத்தில் மும்பையைச் சேர்ந்த பாவேஷ் ஜாவேரி, தனியொருவராக பயணித்துள்ளார்.

இவர் தனது விமானப் பயணத்துக்கான ரூ.18,000 கட்டணத்தை மட்டுமே செலுத்தியுள்ளார்.

பரபரப்பான இரண்டு விமான நிலையங்களை இணைக்கும் இந்த விமான சேவையை அன்றாடம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை மிக அதிகம். ஆனால், தற்போது கொரோனா காரணமாக பயணத் தடை விதிக்கப்பட்டிருப்பதால், ஒரு போயிங் விமானத்தில் பயணம் செய்ய ஒரே ஒரு பயணி மட்டும் முன்பதிவு



செய்திருந்தார். விமான சேவை நிறுவனமான எமிரேட்ஸ், அந்த ஒரு பயணிக்காக விமானத்தை இயக்கியுள்ளது.

'மும்பையிலிருந்து துபாய்க்கு போயிங் விமானத்தை இயக்க ரூ.8 இலட்சம் மதிப்புள்ள எரிபொருள் செலவாகும். இந்த ஒரே ஒரு பயணி இல்லை என்றாலும், இந்த விமானம் பயணித்திருக்கும். ஏனென்றால், துபாயிலிருந்து மும்பை வரும் பயணிகளுக்காக செல்லவேண்டும்' என, விமான சேவை நிறுவன ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

திருவள்ளூர்

# ஊரடங்கு நீடிக்கப்படலாம்

ஊரடங்கு காரணமாக, தற்போது பலன் கிடைக்க ஆரம்பித்துள்ளதாகவும் தேவைப்பட்டால், ஊரடங்கு நீடிக்கப்படவும் கூடுமென முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் நேமம் ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆய்வு செய்த பின்னர் நிருபர்களிடம் முதலமைச்சர் ஸ்டாலின் கூறியதாவது:

முழு ஊரடங்கால் பலன் கிடைக்க ஆரம்பித்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இன்னும்



2 அல்லது 3 நாட்களுக்குள் முழுப் பலனைத் தரும் என்று நம்பிக்கை உள்ளது. எனவே, ஊரடங்கை மதித்து மக்கள் வீடுகளில் இருக்க வேண்டும்.

தடுப்பூசி இயக்கம், மக்கள் இயக்கமாக மாற்றப்படும். பொது மக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி கேட்டு கொள்கிறேன் என்றார்.

கொடைக்கானல்:

# 10,000 மலர்களில் கொரோனா விழிப்புணர்வு




தமிழகத்தில் நாளுக்கு நாள் கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது. இந்நிலையில் தமிழகம் முழுவதும் கொரோனா தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் கொரோனா ஊரடங்கு காரணமாக சுற்றுலா பயணிகள் வருகை இல்லாததால் 2-வது வருடமாக மலர் கண்காட்சி நடைபெறவில்லை. இதனை தொடர்ந்து பிரையண்ட் பூங்காவில் ஏராளமான பூக்கள் பூத்து குலுங்கி வரும் நிலையில் கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பூங்கா நிர்வாகம் சார்பில் கொய்மலர்கள், ஆஸ்ட்ரோ மேரியா, கோரியாப்சிஸ், ஹைட்ரேஞ்சியா, அகபந்தஸ் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலர்களை கொண்டு விழிப்புணர்வு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

தடுப்பு ஊசி செலுத்துவதாலும், முகக்கவசம் அணிவதாலும் கொரோனா வைரஸ்கள் உடைந்து சிதறி அழியும் என்பதை விளக்கும் வகையில் மலர் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தடுப்பு ஊசி செலுத்திக்கொள்வதால் பாதுகாப்பாக இருக்கலாம் என்ற வாசகங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த மலர் அலங்காரம் சுமார் 20-க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு 2 நாட்களில் உருவாக்கப்பட்டுள்ளது என்று பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த மலர் அலங்காரத்தை கண்டு ரசிக்க சுற்றுலா பயணிகள் இல்லை என்றாலும் சமூக வலைதளங்கள் மூலம் படம் மற்றும் வீடியோ காட்சிகள் பகிரப்பட்டு பலரது பாராட்டுகளையும் பெற்றது.

சென்னை

# வேளாண் சட்டத்தை திரும்பப்பெறவும்



விவசாயிகளின் கோரிக்கைகள், உணர்வுகளை மதித்து 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும் என முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: நாடாளுமன்ற நடைமுறைகளைப் புறக்கணித்து அவசரம் அவசரமாகக் கொண்டு வந்த, 3 வேளாண் சட்டங்களையும் எதிர்த்து நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் டெல்லியில் தங்கள் போராட்டத்தை ஆரம்பித்து இன்றுடன் (மே 26) ஆறு மாத காலம் நிறைவு பெறுகிறது.

விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை, உணர்வுகளை மதித்து 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுவதற்கு ஒன்றிய அரசு இதுவரை முன்வரவும் இல்லை.

2021ஆம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலுக்கான திராவிட முன்னேற்ற கழக தேர்தல் அறிக்கையில், 'இந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெறத் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி, இவற்றை ரத்து செய்ய ஒன்றிய அரசு சட்டம் இயற்ற வேண்டும் என வலியுறுத்தப்படும், என தமிழக மக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. எனவே, 3 வேளாண் சட்டங்களையும் மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும். விவசாயிகளுக்கு வேளாண் சட்டங்கள் தொடர்பாக திமுக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.




# 'வீல்பரோ' தள்ளல் வினையானது



விளையாட்டுக்குச் செய்தல், அதுவே நமக்கு வீணான வம்பைத் தேடித்தந்துவிடுமென யாரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். சிந்திக்கத் தூண்டவும் சிரிக்கக் கூடியதுமான இவ்வாறான சம்பவங்கள், பயணக்கட்டுப்பாடு நேரங்களிலும் தளர்த்தப்பட்ட நாளிலும் இடம்பெறாமல் இல்லை.

மே 21, இரவு 11 மணிமுதல் அமல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை மே 25ஆம் திகதி தளர்த்தப்பட்டது. கடுமையான கட்டுப்பாடுகளுடன் தளர்த்தப்பட்டமையால், வீடுகளிலிருந்து வெளியே சென்றவர்கள், ஓரளவுக்கு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றினர்.

அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கே அன்றைய நாளை ஒதுக்கிக்கொண்டனர். அதிகாலை 5 மணிமுதல் அங்காடிகளில் வரிசைகளை காணக்கிடைத்தது. ஆனால், இரவு 9 மணியுடன் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

கொரோனாவுக்கு கொஞ்சமேனும் பலரும் அச்சமடைந்துள்ளனர். இன்னும் சிலர், 'அவர்கள் என்ன அறிவுரை கூறுவது, நாங்களென்ன கேட்பது' எனும் திமிர்த்தனத்துடன் இன்னுமிருக்கின்றனர்.

பெருநகரங்களுக்குள் செல்வோர், வாகனங்களில் செல்லாது, நடந்து செல்லுமாறே அறிவுரை வழங்கப்பட்டது. இதனால், வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கியபின்னர், எதில், ஏற்றிக்கொண்டு வருவதென திக்குமுக்காடிப்போன சிலர், வீட்டிலிருந்த 'வீல்பரோ'க்களை (wheelbarrow) நகரங்களுக்கு தள்ளிச்சென்றுவிட்டனர்.

காஸ் சிலிண்டர்கள் உள்ளிட்ட, பாரமான பொருள்களை, வீல்பரோக்களில் எடுத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது. ஓட்டோக்கள் வீதிகளில் ஓடினாலும், வாடகைக்கு அமர்த்திச் செல்லமுடியாது என்ற கட்டுப்பாடும் கடுமையாக்கப்பட்டிருந்தது.

இதனால், காஸ் சிலிண்டர்களையும் அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட பொதிகளையும் தோள்களில் சுமந்துகொண்டே சென்றனர். கிராமங்களிலும் பெருந்தோட்டங்களிலும் நகரங்களுக்கு அப்பாலும் இவ்வாறான செயற்பாடுகள் அன்றாடம் இடம்பெறுகின்றன. எனினும், பெருநகரங்களில், நாட்டாமைகளைத் தவிர, சாதாரண பொதுமக்களும், தோள்களில் பொதிகளைச் சுமந்துச் சென்றமை, புகைப்படங்களாகின.

அவ்வாறுதான், அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அளுத்கம, தர்ஹா நகரைச் சேர்ந்தவரும் வந்துள்ளார். வீல்பரோவை எடுத்துவந்திருந்த அவர், பொருள்களை ஏற்றிக்கொண்டு, தான் படும் துன்பத்தை, வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக, மற்றொருவரின் உதவியுடன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களிலும் பரவவிட்டிருந்தார். பொதுமக்கள் எவ்வாறு துன்பப்படுகின்றனர் என்பதை எடுத்தியம்பும் வகையிலேயே அந்த வீடியோ அமைந்திருந்தாலும் அரசாங்கத்தின் கட்டளையைக் குத்திக்காட்டிக் கிண்டல் செய்யும் வகையிலும் இருந்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டும் இருந்தது.

அதனால், என்னவோ, முகக் கவசம் அணியாத குற்றச்சாட்டின் கீழ், அளுத்கம, தர்ஹா நகரைச் சேர்ந்த அந்தநபர் கைது செய்யப்பட்டார். பொது இடங்களில் முகக்கவசம் அணியாத குற்றச்சாட்டின் கீழான கைதுகள், முறையாக இடம்பெறுமாயின், நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்படுவர்.

ஏன்? பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர கூட, பொதுச் சந்திப்பொன்றில் முகக் கவசத்தை அணியாது, அமர்ந்திருந்தார். அவரை கைதுசெய்யாமை, ஒரே நாடு இரண்டு சட்டங்களா என சமூகவலைத்தளங்களில் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

சட்டங்கள், கட்டளைகளை பிறப்பிக்கும் போது, மிகக் கவனமாகப் பிறபிக்கவேண்டும். அதேபோல், அச்சொட்டாகப் பின்பற்றவும், தராதரங்களைப் பார்க்காது மீறுவோரைக் கைது செய்து, முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

அதேபோல, அரசாங்கத்துக்கு பாடம் புகட்டவேண்டுமென நினைத்து, தேவையிலான காட்சிகளைப் படமாக்கி, சமூகவலைத்தளங்களில் ஏற்றி சிக்கிக்கொள்ளக்கூடாது. மக்கள் படும் வேதனைகளை வீல்பரோவை தள்ளிக்கொண்டு வந்தவர், வெளிச்சம் போட்டு காண்பித்திருந்தாலும், முகக் கவசம் அணியாதிருந்தமை குற்றம். ஆனால், வீடியோ வெளியானதன் பின்னர், கைதுசெய்தமை, ஏதோவொன்றை மூடிய மறைப்பதற்கான மற்றுமொரு முயற்சியாகும். எதிலும் கவனம், எப்போதும் கவனம் என்றிருந்தால், எந்தவிதமான பிரச்சினைகளும் வராது.

–கலாதேவி





முதற் தடவையாக ODI தொடரை

# பங்களாதேஷிடம் இழந்த இலங்கை

இலங்கையானது, இரு தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் ஒன்றை முதற் தடவையாக பங்களாதேஷிடம் இழந்துள்ளது.

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையையடுத்தே, இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், முஷ்பிக்கூர் ரஹீமின் 125 (127), மகமதுல்லாவின் 41 (58) ஓட்டங்களோடு, 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், துஷ்மந்த சமீர, லக்ஷன் சந்தகான் ஆகியோர் தலா மூன்று, இசுருதான இரண்டு, வனிடு ஹஸரங்க ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு, 247 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஷொரிபுல் இஸ்லாம் (1), முஸ்தபிசூர் ரஹ்மான் (3), ஷகிப் அல் ஹஸன் (2), மெஹிடி ஹஸன் மிராஸிடம் (3) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்து மழை குறுக்கிட்டபோது 38 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பின்னர் 40 ஓவர்களில் 245 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கானது டக்வேர்த் லூயிஸ் முறையில் நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 40 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்களையே பெற்று, டக் வேர்த் லூயிஸ் முறைப்படி 103 ஓட்டங்களால் இலங்கை தோற்றிருந்தது.

இப்போட்டியின் நாயகனாக ரஹீம் தெரிவானார்.

ஈராக்

# பக்தாத் பேரணியில் வன்முறை

## ஆர்ப்பாட்டக்காரரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

ஈராக் தலைநகர் பக்தாத்தில், பேரணி ஒன்றில் வன்முறையின்போது ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

பிரபலமான ஈராக்கிய செயற்பாட்டாளர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களின் கொலைக்கு பொறுப்புக்கூறலை வலியுறுத்தியே ஆயிரக்கணக்கானோர் பக்தாத்தில் ஒன்றுகூடியிருந்தனர்.



> குறிப்பிட்ட கலகத்தின்போது ஈராக் முழுவதுமான சமூக எழுச்சியில் பாதுகாப்புப் படைகளால் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்

தஹ்ரிர் சதுக்கத்தில் நேற்று முன்தினம் காலையில் ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்களில் நாள் முழுவதும் பதற்றம் நிலவியதுடன், மாலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை பாதுகாப்புப் படைகள் ஒடுக்கியபோது வன்முறை ஏற்படிருந்தது.

சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட காணொளிகளில் துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது காண்பிக்கப்பட்டதுடன், கடந்த 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் கலகத்தை ஞாபகப்படுத்தியிருந்தது.

குறிப்பிட்ட கலகத்தின்போது ஈராக் முழுவதுமான சமூக எழுச்சியில் பாதுகாப்புப் படைகளால் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து ஏறத்தாழ 600 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டதுடன், 82 இலக்கு வைக்கப்பட்ட கொலைகளில் 35 செயற்பாட்டாளர்கள் இறந்ததாக மனித உரிமைகளுக்கான ஈராக்கிய உயர்ஸ்தானிரகம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் ஒன்பதாம் திகதி செயற்பாட்டாளர் எஹப் ஜவாட் அல் வஸ்னி, கர்பாலாவிலுள்ள தனது வீட்டுக்கருகில் கொல்லப்பட்டதையடுத்தே குறித்த ஆர்ப்பாட்டங்கள் வெடித்திருந்தன. அந்தவகையில், ஈரானிய ஆதரவு ஆயுதக்குழுக்களே இதை மேற்கொண்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.


ஜுவெண்டஸில்

## ‘அடைய வேண்டியதை அடைந்து விட்டேன்’

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவெண்டஸுடன் தான் அடைய வேண்டும் எனத் தீர்மானித்ததை அடைந்து விட்டதாக அக்கழகத்தின் முன்களவீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ தெரிவித்துள்ளார்.

36 வயதான றொனால்டோவின் எதிர்காலம் குறித்த தொடர்ச்சியான கேள்விகளுக்கு மத்தியிலேயே அவரின் குறித்த கருத்து வெளியாகியுள்ளது.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டிலிருந்து கடந்த 2018ஆம் ஆண்டு ஜுவெண்டஸில் இணைந்த றொனால்டோ, தனது ஒப்பந்தத்தில் இன்னும் ஓராண்டைக் கொண்டிருக்கிறார்.





## ஒப்பந்த நீடிப்புக்கு இணங்கிய மோட்ரிச்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான லூகா மோட்ரிச், ஓராண்டு ஒப்பந்த நீடிப்பொன்றுக்கு றியல் மட்ரிட்டில் இணங்கியுள்ளார்.

35 வயதான மோட்ரிச்சின் ஒப்பந்தமானது அடுத்த மாத முடிவுடன் முடிவடையவிருந்தது.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸிலிருந்து கடந்த 2012ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட மோட்ரிச், றியல் மட்ரிட்டுக்காக 266 போட்டிகளில் விளையாடியுள்ளார்.



## சூனியமாய்

றியோ கிரான்டே ஆற்றைக் கடந்ததையடுத்து, மெக்ஸிக்கோவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குள் நுழைந்த மத்திய அமெரிக்க அகதிகள், டெக்ஸாஸின் லா ஜோயாவிலுள்ள சேற்று வீதியொன்றில் தனியே நிற்கின்றனர்.

ஈரான்



ஜனாதிபதித் தேர்தலில்

## போட்டியிட ஏழு வேட்பாளர்களுக்கு அனுமதி

அடுத்த மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ள ஈரானின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏழு வேட்பாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இதிலொருவரும் பிரபலமான சீர்திருத்தவாதியோ அல்லது நடைமுறைவாதியோ அல்லர்.

நேற்று முன்தினம் பட்டியலை உள்நாட்டமைச்சு அறிவித்த நிலையில், நீதித்துறை தலைவர் எப்ராஹிம் றைசி உள்ளிட்டோர் காணப்படுகின்றனர்.

இந்நிலையில், தகுதிநீக்கம் செய்யப்பட்ட 585 பேரில், பாராளுமன்ற சபாநாயகர் அலி லரிஜனி, தற்போதைய முதலாவது உப ஜனாதிபதி எஷக் ஜஹன்கிரி, முன்னாள் ஜனாதிபதி மஹ்மூட் அஹ்மடிநிஜாட் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

மாலி

முன்னாள் இராணுவப் புரட்சித் தலைவர்

## அதிகாரத்தை கைப்பற்றினார்

அதிகாரத்தைத் தான் கைப்பற்றியுள்ளதாக மாலியின் இடைக்கால உப ஜனாதிபதி கேணல் அஸ்ஸிமி கொய்டா தெரிவித்துள்ளார்.



இடைக்கால ஜனாதிபதியும், பிரதமரும், புதிய அரசாங்கமொன்றின் அமைப்பு குறித்து கலந்தாலோசிக்கத் தவறியமையடுத்தே தான் அதிகாரத்தைக் கைப்பற்றியதாக கொய்டா கூறியுள்ளார்.

இந்நிலையில், திட்டமிட்டபடி தேர்தல்கள் அடுத்தாண்டு நடைபெறுமென கொய்டா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யூரோ கிண்ணத்தையடுத்து ஜேர்மனி பயிற்றுவிப்பாளராக

## லோவைப் பிரதியிடவுள்ள பிளிச்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரையடுத்து, ஜேர்மனி பயிற்றுவிப்பாளராக ஜோச்சிம் லோவை, அந்நாட்டின் புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்னாள் முகாமையாளர் ஹன்ஸி பிளிச் பிரதியிடவுள்ளார்.

ஜேர்மனியின் பயிற்றுவிப்பாளராக 2006ஆம் ஆண்டு முதல் லோ இருக்கின்ற நிலையி, 2024ஆம் ஆண்டு வரையில் ஜேர்மனி முகாமையாளராகவிருக்கும் ஒப்பந்தமொன்றில் பிளிச் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜேர்மனியுடன் லோவின் உதவியாளராக 2006ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பிளிச் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




எதியோப்பியா

எதியோப்பிய படைவீரர்களால்

## 500க்கும் மேற்பட்டோர் கைது

எதியோப்பியாவின் வட பிராந்தியமான திக்ரேயின் ஷிரே நகரத்திலுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான நான்கு முகாம்களிலிருந்து 500 இளைஞர் மற்றும் பெண்களை வலிந்து கடந்த திங்கட்கிழமையிரவு எரித்திரிய, எதியோப்பிய படைவீரர்கள் கைது செய்ததாக, மூன்று தொண்டுப் பணியாளர்களும், வைத்தியரொருவரும் றொய்ட்டர்ஸுக்குத் தெரிவித்துள்ளனர்.



ஐ.அ. அமீரகத்தில்

## செப்டெம்பர் ஒக்டோபரில் மிகுதி ஐ.பி.எல்?

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) இரண்டாவது பாதியை, ஐக்கிய அரபு அமீரகத்தில் இவ்வாண்டு செப்டெம்பர் 18ஆம் திகதிக்கும், ஒக்டோபர் 12ஆம் திகதிக்குமிடையிலான காலப் பகுதியில் நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆராய்கிறது.

இது நடைபெறுவதற்கு பல்வேறு நாடுகளின் கிரிக்கெட் சபைகளின் போட்டி அட்டவணைகள் மாற்றப்பட வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பகுதியில் ஐ.பி.எல் நடைபெற்றால், சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பாகுமெனக் குறிப்பிடப்படுவதற்கு ஒரு வாரம் முன்பாகவே ஐ.பி.எல் முடிவடையுமென்பது குறிப்பிடத்தக்கது.




ஐ. அமெரிக்கா

## பதின்ம வயதினரில் உயர் திறனுடன் மொடெர்னா

12 வயது தொடக்கம் 17 வயதானோரில் தமது கொவிட்-19 தடுப்புமருந்தானது உயர் திறனுடனிருப்பதாக மொடெர்னா தெரிவித்துள்ளது.

மொடெர்னாவின் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற 3,732 இளம் தன்னார்வலர் பங்கெடுத்த சோதனையொன்றில் கொவிட்-19 தொற்றெதுவும் அவதானிக்கப்படவில்லை.



இந்நிலையில், ஒழுங்குபடுத்துநர்களிடம் பூகோள ரீதியில் விரைவில் தரவை சமர்ப்பிக்கவுள்ளதுடன், பதின்ம வயதினரில் பயன்படுத்த அனுமதியை எதிர்பார்ப்பதாக மொடெர்னா கூறியுள்ளது.

பதின்ம வயதினர் அரிதாகவே கொவிட்-19-ஆல் மோசமாகப் பாதிக்கப்படுகின்றபோதும், அவர்கள் தொற்றைப் பரப்ப முடியும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 27 மே 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.